# கணியான் கூத்து

திருமதி சியாமளா பாலகிருஷ்ணன்
பி.ஏ., பி.டி., எம். லிட்.

கணியான் என்னும் வகுப்பினர் தமிழ்நாட்டில் பெரும்பாலும் திருநெல்வேலி, கன்யாகுமரி மாவட்டங்களில் வசித்து வருகின்றனர். இவர்களின் முக்கிய தொழிலே 'கூத்து' ஆடுவது தான். பொதுவாக விவசாயத்திலும் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். நெல்லை, குமரி மாவட்டங்களில் கிராம தேவதைகளின் திருவிழாக்களை 'அம்மன் கொடை' என்றழைப்பர். இங்கு கணியான் கூத்து இல்லாத அம்மன் கொடையே இருக்காது.

வில்லுப்பாட்டு, கைச்சிலம்புப் பாட்டு, லாவணி போன்ற கதைப்பாட்டுகளுடன் சேர்ந்ததுதான் கணியான் கூத்தும். இக்கதைப் பாட்டைக் கணியான் வகுப்பினர் மட்டுமே கையாளுவதால், இதற்குக் கணியான் கூத்து என்று பெயர். செவிக்கு இசையுணவைத் தவிர இதில் கண்டு களிக்க நடனமும் உண்டு. வசனமுமுண்டு. ஆகவே இக்கலையைக் 'கூத்து' என்றழைப்பது சாலப்பொருந்தும்.

இக்கணியான் கூத்தில் முக்கியமாக 'மகுடம்' என்னும் இசைக்கருவி கையாளப்படுவதால் இது 'மகுடக் கச்சேரி' என்றும் அழைக்கப்படுகிறது. மகுடம் என்பது வட்டமான, தோலாலான, ஒருமுக தாளவாத்தியம். இது தவில் வாத்தியத்தின் இருதலைகளைப் போன்றிருக்கும். கன்றுக்குட்டி அல்லது ஆட்டுத் தோலால், விளிம்புகளில் சற்று பெரிதாக உருட்டியிருக்கும். ஒரே கூத்தில் இரு மகுடங்களாவது இருக்கும். 'வலந்தலை' யாக வாசிக்கப்படும் மகுடத்தில் லய பிரஸ்தாரங்கள் அதிகமாயிருக்கும். 'இடந்தலை' யாக வாசிக்கப்படுவது, தக்கு ச்ருதியில் ஸ்ர்வலகுவை முக்கியமாகக் கொண்டிருக்கும். இருமகுடங்களும் சேர்ந்து இயங்கும் பொழுது, அவைகளின் லயவின்யாஸமும், கோர்வைகளும் நடைபேதங்களும் கேட்க மிக அருமையாகவிருக்கும். இம்மகுடத்தை வாசிப்பவர்கள், அதை இடுப்பில் கட்டிக் கொண்டு, மற்றொரு பக்கத்தின் கயிற்றைக் கையில் பிணைத்துக் கொண்டு இரு கைகளாலும் வாசிப்பர். பிரஸ்தாரங்கள் வலது கரத்தினால் அதிகமாகவும், மகுடத்தை அணைத்தவாறு இயங்கும் இடது கரத்தினால் சற்று நிதானித்தும் வாசிக்கப்படும். மகுடங்களைத் தவிர ஜால்ரா எனப்படும் கைத்தாளமும் உண்டு. இந்த மூன்று வாத்தியக்காரர்களையும் பக்க மேளங்களாய்க் கொண்டு நடுவில் பிரதானப் பாடகர் ஒருவர் மிக லாவகமாய் உடலை வளைத்து ஆடிக்கொண்டே கதையைப் பாட்டாகப் பாடி, இடையே வசனங்களால் கதையின் கோர்வை விடாதபடி இணைப்பார். பக்கமேளக் காரர் மூவரும், தங்கள் வாத்தியங்களை வாசிப்பதைத் தவிர பாட்டையும் எடுத்துப் பின் பாட்டாகப் பாடுவர். இவர்கள் மெய் மறந்து வாசித்துக் கொண்டே, பாடிக்கொண்டே அவ்வப்போது, வெகு நளினமாய் அவர்கள் இருக்கும் இடத்திலேயே ஆடுவதும் உண்டு. இந்நால்வரைத் தவிர பெண்வேடம் தரித்த இரு ஆண்கள் மகுடத்திற்கேற்ப முன்னே ஆடுவர். இவர்கள் பக்கமேளத்திற்கு முன் சுற்றிச் சுற்றி நடனமாடுவர்.

குறைந்தது ஆறு முதல், ஒன்பது நபர்களைக் கொண்டே இக்கணியான் கூத்துக் குழுவினர், தை-மாசி மாதம் முதல் ஆடி–ஆவணி மாதங்கள் வரை கிராமம் கிராமமாய்ச் சென்று அம்மன் கொடைகளில் பல்வேறு கிராமதேவதைகளின் கதைகளை—வள்ளி திருமணம், பார்வதி கல்யாணம், பழயனூர் நீலி, எசக்கி, மன்னராஜா சாஸ்தா, நல்லதங்காள், சுடலைமாடன், மதுரை வீரன், முத்தபட்டன், காந்தருபன்-காந்தருபி போன்ற பல்வேறு கதைகளை கூத்தாடுவர். மேற்கண்ட கதைகளை அக்கலைஞர்கள் 'ஏட்டுக் கதைகள்' என்றழைக்கின்றனர். முன்னோர்களாகிய பெரியோர்களால் எழுதப்பட்ட இக்கதைகளையே பொதுவாகக் கணியான்கூத்துக் கலைஞர்கள் வில்லடிச்சான் பாட்டு பாடும் வில்லுப்புலவர்களும் தங்கள் கச்சேரிகளில் பயன்படுத்துகின்றனர். இப்பாடல்களில் வர்ணமெட்டுக்களும், அவற்றைப் பாடும் விதமும் அநேகமாய் இவ்விரு கலைஞர்களும்

ஒன்றுபோலவே கையாளுகின்றனர். பிரதானப் பாடகரைத் தொடர்ந்து பின்பாட்டுக்காரர் எடுத்துப் பாடுவதும், அவ்வப்போது 'ஆமாம்', 'அப்படி' என்று ஏககாலத்தில் அனைவரும் சொல்லுவதும் சில ஸ்வரங்களில் அனைவரும் சேர்ந்து நீட்டி ஒன்றுபோல நிற்பதும், எல்லாமே, இரு கலைகளுக்கும் பொதுவான அம்சங்களாகும். அநேகமாய் கிராமிய வர்ண மெட்டுக்களே கணியான் கூத்தில் நிறைந்திருப் பினும், அவ்வப்போது தன்யாசி, தோடி, முகாரி, காம்போதி, நீலாம்பரி, ஸஹானா போன்ற சாஸ்த்ரீய ராகங்களும் கிளிக்கண்ணி, நொண்டிச் சிந்து, காவடிச்சிந்து, வர்ணமெட்டுக்களும் இடம் பெறுகின்றன. பிரதானப்பாடகர் வசனம் பேசும் போது கூட மகுடங்களும் ஜால்ராவும் மெதுவாக வாசிக்கப்படுவது கேட்க மிக இனிமையாக இருக்கும். அனைவரும் சேர்ந்து பாடும்போதும், சலங்கைகளுடன் ஆட்டக் காரர்கள் ஆடும்போதும், இவர்களின் வாசிப்பு மிகுந்த விறுவிறுப்பையும் ஓர் உச்சகட்டத்தை யும் அடைகிறது.

கணியான் கூத்து, கிராமங்களில் கோயில் களின் முன்போ, களங்களிலோ இரவு 9 மணிக்கு மேல் தொடங்கி, விடியும்வரை நடை பெறும். ஒரு காலத்தில், பக்கமேளக்காரரைத் தவிர பிரதானப் பாடகரே பெண்வேடமும் தரித்து, ஆடிப்பாடி, வசனம் பேசி கூத்தை நடத்தி வந்தாராம். ஒரே கதையை, ஒருவரே அபிநயித்து நடித்துக் காட்டுவதை பரதரின் நாட்டிய சாஸ்திரம் 'பாணிகா' என்று அழைக் கிறது. நமது தமிழ் பிரபந்த வகைகளிலொன் றான 'நொண்டி நாடகம்' எனப்படுவது 'பாணிகா' என்னும் இந்த நாட்டிய வகை யைச் சேர்ந்ததுதான். நொண்டி நாடகத்தில் ஒரு நடிகன் ஒரே கதை முழுவதையும் தானே சொல்லி, நடித்துக் காட்டுவானாம். ஆனால், சமீப காலங்களில், ஒருவரே நடித்து, அபி நயித்து, ஆடிக்காட்டி வந்த கணியான்கூத்தின் இப்பழக்கம் மாறி, பொது மக்களைக் கவர உத்தேசித்தோ என்னவோ, இரு தனி ஆட்டக் காரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்வாட் டக்காரர்கள் பெண்வேடம் தரித்து, முகத்தில் அரிதாரத்தால் ஒப்பனை செய்து கொண்டு, காலில் சதங்கையும் கட்டிக்கொள்கின்றனர். இவர்களது நிருத்தம் மிக விறுவிறுப்பாக உள் ளது. எவ்வளவு பெரிய களமாயிருப்பினும், அந்த வெற்றிடத்தை வெகு லாவகமாய் நிரப்பி சுற்றிச் சுற்றி, சற்றும் தாளம் பிசகாமல் விரிந்து பரந்து ஆடும் ஆற்றல் நம்மை ப்ரமிக்க வைக் கிறது. கதக் என்னும் நடனவகையில் காணப் படும் பாத ஜாலங்களின் வேகத்தை இவர்களின் நடனத்தில் ஓரளவு காணலாம். பரதரின் 'லாஸ் யாங்கங்களில்' ஒன்றான 'பாதபாடம்' என் னும் வகையை இக்கணியான் கூத்துக் கலை ஞர்கள் வெகு நேர்த்தியாகக் கையாளுகின்ற னர். 'பாதபாடம்' என்பது தாளவாத்தியத் தின் சொல்லுக்குச் சொல் ஆடுபவரின் கால் பேசுவதாகும். திச்ர, சதுச்ர, மிச்ர வகைகளை இவர்கள் மகுடங்களுடன் சேர்ந்து மாறி மாறி பாத பேதங்களாய்க் கையாளுவது மிகவும் போற்றத் தக்கதாகும். இவர்கள் ஆட்டத்தில் அபிநயமில்லை. ஆனால் இவர்களின் அங்க அசைவுகள் கரக ஆட்டக்காரர்களின் நட னத்தை ஒட்டியதாகவே இருக்கிறது. இவர்கள் ஆடாத சமயம் பின்பாட்டுக்காரர்களாகவும் மாறிவிடுவர்.

சாதாரணமாக நெல்லை, குமரி மாவட்டங் களில் கிராம தேவதைகளுக்குப் பூசையிடும் பூசாரியைக் கோமரத்தாடி என்றழைப்பர். இத் தேவதைகளுக்கு விலங்கினங்களைப் பலிகொடுப் பது தொன்று தொட்டு வந்துள்ள ஒரு பழக்கா மாகும். பலியான விலங்கின் குருதியை ஒரு கொப்பரையில் வைத்திருக்க, கூத்தாடும் கணி யான், கூத்து முடிந்ததும், தன் உடலில் ஒரு சிறிய வெட்டுக்காயத்தையாகிலும் செய்து, தனது குருதியையும் அத்துடன் சேர்ப்பான். அந்த கொப்பரைக் குருதியை, 'அம்மனைத் தன்னிடத்தே கொண்டுள்ள' கோமரத்தாடி எடுத்துக் குடித்து விடுவான். இந்த வழக்கம் இன்றும் பல கிராமங்களில் நிகழ்ந்து வருகிறது. ''காளி ஊட்டும் (படையல்) கணியான் கூத் தும்'' என்பது இம்மாவட்டங்களில் வழங்கும் ஒரு பழமொழி. கூத்து முடிந்ததும் அம்மனுக்கு கற்பூர ஆரத்தி எடுக்கும் சமயம் ''மங்கள வாளி(ழி)'' என்னும் மங்களப்பாடலைப் பாடு வர்.

கணியான் கூத்து அம்மன் கொடைகளைத் தவிர விசேஷ அழைப்புகளின் போதும், அறு வடைக் காலங்களிலும் நடைபெறுகின்றன. இக்கூத்து குரு முகமாகவே பயிலப்படுகிறது. மகுட வாத்தியக்காரர்களுக்கும் குரு உண்டு.

குருவை ஆசான் என்றோ அண்ணாவி என்றோ அழைக்கின்றனர். பாணாங்குளம் ராமசாமி கணியான் என்பவர் கணியான் கூத்துக்கு வெகு நேர்த்தியாக 'வசனம்', 'இசை' இவற்றில் 'சோகம்', 'சிங்காரம்' முதலியவைகளை அமைத்து, இக்கூத்தின் அமைப்பை ஓர் ஒழுங்கு படுத்திய மாபெரும் அண்ணாவி என்று கணியான்மார் கூறுகின்றனர். பழங்காலந்தொட்டு இவர்கள் இப்பெரும் ஆசான்களின் 'ஏட்டுக் கதை' களையே கையாண்டாலும், சமீப காலத்தில் அநேக புதிய 'கற்பனைக் கதை' களுக்கும் ஆடத் தலைப்பட்டுள்ளனர். சாதாரணமாய், ஒரே கதையை யாரொருவர் அதிக நாட்கள் நடத்துகின்றனரோ, அக்குழுவினரே மிகச் சிறந்த குழுவாகக் கருதுகின்றனர் கிராமக்கள்.

கணியான் கூத்துடன் தெருக்கூத்து, சாக்கியார் கூத்து போன்றவற்றை ஒப்பிடுதல் ஆராய்ச்சிக்குரிய பொருளாகும். பரதர் கூறியுள்ள நாடகத்தின் முக்கிய லட்சணங்களைக் கொண்டுள்ள இக்கூத்தை, நெல்லை, குமரி மாவட்டத்தினரைத் தவிர, மற்றும் பலரும் அறிய, பேணிக் காத்து வளரச் செய்வது கலை வல்லுநர்களின் தலையாய கடமையாகும். இவ் வல்லுநர்களைக் கொண்டு இயங்கி வரும் இயல் இசை நாடக மன்றம் செய்து வரும் பல அரும் பணிகளில் ஒன்றாக, இக்கூத்துக்கலையின் மறுமலர்ச்சிக்கும் ஊக்கமளிக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். ●

---


*With best compliments from :*

Phone : 33211 / 27898

Works: 39671

# T. M. Radhakrishna Chetty & Co.,

IRON MERCHANTS & MANUFACTURERS

**146, Rasappa Chetty Street,**
**MADRAS 600 003**